26—

சமுதாயக்கூடம்

***41406—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள வேடியப்பன் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள அருள்மிகு வேடியப்பன் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் அத்திருக்கோயிலுக்கு அறநிலையத் துறையால் சமுதாயக்கூடம் கட்டும் முன்மொழிவுகள் ஏதுமில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 27, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

27—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

*** 36452—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகனூர் பேரூராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?